பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 07 செவ்வாய்க்கிழமை 23.11.2021 கதிர் 246

## அரசின் அசட்டையே விபத்துக்கு காரணம்
### சபையில் ஹக்கீம் குற்றச்சாட்டு

கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் இன்று இடம்பெற்ற படகு விபத்தானது, அரசின் அசட்டை காரணமாகவே நடந்துள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. ☞2

# கிண்ணியாவில் கவிழ்ந்தது படகு; மாணவர்கள் உட்பட 6 பேர் மரணம்
## 11 பேர் உயிருடன் மீட்பு; சிலரைத் தேடும் சுழியோடிகள்





திருகோணமலை மாவட்டம், கிண்ணியா – குறிஞ்சாக்கேணிப் பகுதியில் இன்று காலை படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மாணவர்கள் உட்பட 6 பேர் சடலங்காக மீட்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 20 பேருக்கும் மேற்பட்டோர் குறித்த படகில் பயணித்துள்ளனர். ☞2

## கொந்தளித்தனர் மக்கள்; வீதியில் ரயர்கள் எரிப்பு!



திருகோணமலை, கிண்ணியா – குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் இடம்பெற்ற உயிரிழப்புகளுக்கு அதிகாரிகளின் அசமந்த நடவடிக்கையும் காரணம் என்று குற்றம் சுமத்தி கிண்ணியாவில் மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

ரயர்களை எரித்து மக்கள் போராட்டம் நடத்தியதால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது.

மக்களின் போராட்டங்களை அடுத்து அரச அலுவலகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.



## தௌபீக் எம்.பியின் வீடு மீது தாக்குதல்!

கிண்ணியா படகு விபத்தில் மாணவர்கள் இன்று உயிரிழந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை ☞2




'கலைக்கதிர்' பிரதம ஆசிரியரும், ஸ்தாபக ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதனின் இறுதிக்கிரியைகள் இன்று நடந்தன. யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் மயானத்தில் அவரது பூதவுடல் இன்று மாலை தீயுடன் சங்கமமாகியது.

## மாவீரர் நினைவேந்தலுக்குத் தடைபோட ஊர்காவற்றுறை நீதிமன்றமும் மறுப்பு!



(ந.லோகதயாளன்)

மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை உத்தரவு கோரி ஊர்காவற்துறைப் பொலிஸாரால் ஊர்காவற்துறை நீதிவான் ☞2



## இராணுவ பஸ் மோதி மாணவி உட்பட இருவர் காயம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி தாவடிச் சந்தி ☞2

## பிரசவித்த சிசுவைப் புதைக்கும் முயற்சியைத் தடுத்த அயலவர்கள்
### மட்டுவிலில் காப்பாற்றப்பட்ட குழந்தை

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில் பகுதியில் இளம் பெண் ஒருவருக்கு பிறந்ததாக கருதப்படும் பச்சிளம் குழந்தை ஒன்றை அந்த இளம் பெண்ணும், அவருடைய தாயாரும் உயிருடன் புதைக்க முற்பட்ட நிலையில் அயலவர்களால் குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ☞2

## சம்பந்தன், மாவை, சித்தர், செல்வம் ஐ.நா.உயர் அதிகாரியுடன் பேச்சு!
### கொழும்பில் இன்று நடந்தது

கொழும்பு, நவம்பர் 23

இலங்கைக்கு மூன்று நாள் விஜயமாக வருகை தந்திருக்கும் ஐ.நாவின் அரசியல், அமைதி உருவாக்கல் விவகாரங்களுக்கான உதவி செயலாளர் நாயகம் காலெட் கியாறியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆணின் சடலம் மீட்பு!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனைக் கடலில் ஆணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.



இன்று காலை, சடலம் ஒன்று மிதக்கின்றது எனப் பூநகரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டனர்.

சடலமாக காணப்பட்டவர் யாழ்ப்பாணம் - பாசையூரைச் சேர்ந்தவர் எனவும், அன்ரனிஷ் வீதியைச் சேர்ந்த 42 வயதுடைய டண்சன் கனிராஜ் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பூநகரி பிரதேச சபை பட்ஜட்டும் தோற்கடிப்பு

(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த பூநகரி பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோல்வி அடைந்தது.

பூநகரி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவிசாளர் ஐயம்பிள்ளையால் இன்று சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போதே 3 மேலதிக வாக்குகளால் தோல்வி அடைந்தது.

இதன்போது ஆதரவாக 8 வாக்குகளும், எதிராக 11 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஒருவர் நடுநிலை வகித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தன்னுடைய தலைவரை எதிர்த்து வாக்களித்து தோற்கடிக்கச் செய்துள்ளது. எதிர்க்கட்சியினர் தலைவரை ஆதரித்து வாக்களித்துள்ளனர்.

### தூதுவர் பதவியை ஏற்பதற்காக

# எம்.பி. பதவியிலிருந்து விலகுகிறார் சமரசிங்க

### அவரே இன்று சபையில் தெரிவிப்பு

தான் எதிர்வரும் சில நாள்களில் நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜிநாமா செய்யபோகிறேன் என மஹிந்த சமரசிங்க எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் தூதுவர் பதவியை ஏற்பதற்காகவே இவ்வாறு பதவியை இராஜிநாமா செய்யவுள்ளேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கமைய, எதிர்வரும் 29ஆம் திகதி அமெரிக்காவுக்கு பயணமாகவுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க ஓய்வுபெற்று சென்றுள்ளமையை அடுத்து அந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசின் அசட்டையே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் சுட்டிக்காட்டினார்.

குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகு விபத்து தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் இன்று சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதன்போது, அரசின் அசட்டை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

மேலும், முறையான வகையில் அந்தப் படகு பாதை சேவை நடைபெறவில்லைஎனவும்அவர்குற்றஞ்சாட்டினார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியின்றியே கிண்ணியாவில் இந்தத் தரமற்ற தற்காலிக படகுப் பாதை இயங்கியுள்ளது எனவும், இது தொடர்பில் உடனடி விசாரணை வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, கிண்ணியா படகு பாதை குறித்து பல தடவைகள் சுட்டிக் காட்டியபோதும் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவித்தார்.

## கிண்ணியாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அனர்த்தத்தில் சிக்கிய மாணவர்கள் மூவர் உட்பட 11 பேர் உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், சிலர் காணாமல் போயுள்ள நிலையில் அவர்களைத் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

பழைய பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதால் கிண்ணியா - குறிஞ்சாக்கேணி ஆகியவற்றுக்கு இடையில் இந்தப் படகு சேவை ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளது.

சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை இதனை விடவும் அதிகரிக்கும்எனஅச்சம்கொண்டிருக்கும் பொலிஸார், கடற்படையினருடன் இணைந்து தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

காணாமல்போன ஏனையோரை மீட்டெடுக்கும்பணிகளில்கடற்படையின் சிறப்புப்படையணி,உடனடிசெயற்பாட்டுப் படையணி, கடற் படையணி உள்ளிட்ட சில சிறப்பு அணிகளும், சுழியோடிகளைச் சேர்ந்த எட்டுக் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளனஎன்று கடற்படை ஊடக அதிகாரி தெரிவித்துள்ளார்.

சகு சஹீ (மூன்றரை வயது), சஹிலா (வயது 6), பரீஸ் பகி (வயது 6), சப்ரியா (வயது 30), ஹேப்துல் சாகர், எவ்.சரீன் (வயது 8) ஆகியோரே இதுவரை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

## பிரசவித்த சிசுவைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் 18 வயதுடைய இளம் பெண் தன்னுடைய பச்சிளம் குழந்தை ஒன்றை நிலத்தில் புதைப்பதற்குத் தன் தாயாருடன் சேர்ந்து முனைந்தார் எனவும், அப்போது குழந்தை வீறிட்டு அழுததால் அதைக் கேட்டுத் தாம் அங்கு விரைந்து, அசம்பாவிதத்தை உணர்ந்து, குழந்தையை மீட்டுக் காப்பாற்றினோம் எனவும் பொலிஸாரின் விசாரணைகளின் போது அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், குழந்தை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தௌபீக் எம்.பியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த படகு சேவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் மேற்கொள்ளவில்லை என்று மக்கள் சாடியுள்ளனர்.

அதேசமயம் அதிகளவானோரை படகில் ஏற்றியமையே விபத்துக்கான காரணம் எனவும் பொலிஸ் அறிவித்துள்ளது.

## மாவீரர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் இன்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலையாகுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்துறை தொகுதி கிளை செயலாளர் கருணாகரன் நாவலன், தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிப முன்னணியின் செயலாளர் கருணாகரன் குணாளன், ஊர்காவற்துறை பிரதேச சபை உறுப்பினர் அம்பலம் கனகையா , ஊர்காவற்துறை தொகுதி கிளையின் நிர்வாகக் கிளை உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிக்ற் (சின்னமணி), ரமேஷ் றமில்டன், ருத்ரன் ( நெடுந்தீவு ) ஆகியோருக்கு ஊர்காவற்துறை பொலிஸாரால் வழங்கப்பட்டிருந்த உத்தரவுக்கிணங்க இன்று அத்தரப்பினர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இவர்கள் சார்பாக மூத்த சட்டத்தரணி நல்லையா சிறீகாந்தா ஆஜராகி ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வாதங்களை முன்வைத்திருந்தார். அவரோடு இணைந்து சட்டத்தரணி அருட்பிரகாசம் நிரோஷன், சட்டத்தரணி சுகாஷ், சட்டத்தரணி ஷாலினி ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.



## சம்பந்தன், ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் இன்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பு கொழும்புக்கான ஐ.நா. அலுவலகத்தில் நடைபெற்றது.

பேச்சுப்பற்றியவிவரங்கள்இவ்விதழ் வெளியாகும் வரை கிடைக்கவில்லை.

கூட்டமைப்பின் முக்கியஸ்தரான சுமந்திரன் கனடாவில் நிற்கின்றமையால் இந்தச் சந்திப்பில் பங்குபற்றவில்லை.

## மாணவி உட்பட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்பாடசாலைமாணவியைஏற்றிச்சென்ற மோட்டார் சைக்கிளை இலக்கத் தகடு அற்ற இராணுவ பஸ் மோதித் தள்ளியது.

இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் தலைக்கவசம் அணிந்திருந்த போதும் தலையில் பலத்த காயமடைந்து அதிக குருதி வெளியேறியது. அதே நேரம் மோட்டார் சைக்கிளில் பயணித்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவியும் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய இராணுவ பஸ்ஸில் எந்தவொரு விளக்குகளோ, ஒலிஎழுப்பியோ இல்லாததோடு வாகனத்தின் இரு திசைகளிலும் இலக்கத் தகடுகள் அற்றுக் காணப்பட்டன.

இருந்தபோதும் இந்த பஸ் மோட்டார் போ.வ.திணைக்கள பதிவின் பிரகாரம் இராணுவத் தலைமையகப் பதிவைக் கொண்டிருந்தபோதும் விபத்து இடம்பெற்ற பிரதேசத்துக்கு வருகை தந்த இராணுவத்தினர் தமது வாகனம் அல்ல எனத் தெரிவித்த நிலையில் பஸ்ஸை சுன்னாகம் பொலிஸார் எடுத்துச் சென்றனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்திய முதலீட்டுக்கு அழைப்பு

**பொருளாதார நெருக்கடியில் மூழ்கித் தடுமாறுகின்றது அரசு. சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு நிதி முடக்கத்தைச் சந்தித்துள்ளது நாடு.**

**பணவீக்கம் கட்டு மீறி விட்டது. ரூபாவின் பெறுமதி அதலபாதாளத்தில். அதனால் விலைவாசி உயர்வு எக்கச்சக்கம். வாழ்க்கைச் செலவு எகிறிவிட்டது. அரைப் பட்டினி நிலைமையை நோக்கும் பாமரக் குடும்பங்கள். விவசாயமும் பின்னடைவு. அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்குக் கூட அந்நியச் செலாவணிக் கையிருப்பு இல்லை.**

**வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைவதே ஒரே வழி என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பல பிரமுகர்களும், பொருளாதார நிபுணர்களும் அரசை வற்புறுத்தத் தொடங்கிவிட்டனர்.**

**ஆனால், சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைந்தால் அதோ கதிதான். அது விதிக்கும் கடும் நிபந்தனைகளுக்கு எல்லாம் இணங்கியாக வேண்டும். அது கூறும் – வழிகாட்டும் – நிதிக்கொள்கைகள், கட்டுப்பாடுகளை அப்படியே பின்பற்ற வேண்டியிருக்கும். அப்படிச் செய்தால் பல சமயங்களில் மக்களின் சீற்றத்துக்கும், எரிச்சலுக்கும், கோபத்துக்கும் அரசு உட்பட நேரிடும். அதன் விளைவு நெருக்கடி மிகுந்ததாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**இந்தப் பின்புலத்திலேயே, சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடையும் யோசனையை ஆட்சித் தரப்புப் புறக்கணித்து, சர்வதேச நாடுகளிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் தனது திட்டத்தை முன்நகர்த்துகின்றது.**

**இந்த எண்ணத்தில் நாட்டின் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ விரைவில் புதுடில்லி செல்லவிருக்கின்றார் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல் வெளியிட்டுள்ளார்.**

**நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகள் என்ற சவாலுக்கு முகம் கொடுக்கும் திட்டங்கள், யோசனைகளை மனதில் வைத்துக் கொண்டே நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லி செல்ல விரும்புகின்றார் என்கிறார் அமைச்சர் பீரிஸ்.**

**வெறும் நிதி உதவிகளை இந்தியாவிடம் பெறுவதல்ல, அத்தோடு இந்திய முதலீடுகளை இங்கு – இலங்கையில் – மேற்கொள்ளச் செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்துவதும் நிதியமைச்சரின் திட்டம் என்கிறார் அவர்.**

**நல்லது. இந்திய முதலீடுகளை இலங்கையில் எதிர்பார்க்கும் கொழும்பு ஆட்சிப் பீடம், இந்தியர்கள் இங்கு தமது முதலீடுகளைச் செய்யக் கூடியதான – தோதான – களச் சூழலைப் பேணுகின்றதா என்பதுதான் முதலில் கேள்வி.**

**அடக்கப்படும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வை வழங்குங்கள் என்று இந்திய மூன்று, நான்கு தசாப்தங்களாக வலியுறுத்தி வருகின்றது.**

**ஆனால், கொழும்போ, அந்த நியாயமான கோரிக்கையை உதாசீனப்படுத்தி, புறம்தள்ளிவிட்டு, தன்னுடைய பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மை திமிர்ப் போக்கையே வெளிப்படுத்தி நிற்கின்றது. சிறுபான்மையினரை அடிமைப்படுத்தி, அடக்கி, ஒடுக்கும் தனது கொடூரத்தையே அது தொடருகின்றது.**

**இந்தப் பின்புலத்தில் இந்திய முதலீடு என்பது சுலபமாக வரக் கூடிய ஒன்றல்ல. இந்திய முதலீடுகளினால் தமிழர் தாயகப் பகுதியான வடக்கும் கிழக்கும் வளம் பெற்று மேம்பாடடைந்து விடக்கூடாது என்ற பேரினச் சிந்தனையில் நிற்கும் கொழும்பு அரசை நம்பி, இந்திய பணமுதலைகள் இங்கு முதலீடு செய்வது துர்லபமே.**

# பொதுத் தேர்தலை நடத்த அரசாங்கம் எப்பவும் தயார்

## காஞ்சன விஜேசேகர பதில்



ஜனாதிபதித் தேர்தல் அல்லது பிரதேச சபைத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சி கோருவதாகவும் அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்த தயாராகவே இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் முறைவாசிப்பின் மீதான 7 ஆவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் தவறானவையாக இருந்தால், மக்களின் நலன் கருதி அவற்றை திரும்பப் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். சுற்றுலாத்துறை மூலமே நாட்டுக்குப் பணத்தைக் கொண்டு வர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார். சுற்றுலாத்துறைக்காக முயற்சி எடுத்தபோது, நாட்டை ஆய்வு கூடமாக மாற்ற வேண்டும் என எதிர்க்கட்சியினர் கூறினர். ரஷ்யா, உக்ரைன் நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளை வரவழைத்து சுற்றுலாத்துறையை ஆரம்பிக்க முயற்சித்த போது, அதனைக் கடுமையாக விமர்சித்தனர்.

முதலீட்டாளர்களை வரவழைத்த போதும் அதனைக் கடுமையாக விமர்சித்து எதிர்த்தனர். துறைமுக நகரம் தொடர்பாகத் தவறான கருத்தை உருவாக்கினர். எமது சிறந்த வருவாய் கிடைக்கும் வழிகளாக இருந்த விமான நிலையங்கள், துறைமுகங்கள் மூலம் கிடைக்கவிருந்த வருமானத்துக்கு நீங்கள் தடைகளை ஏற்படுத்தினீர்கள்.

நாட்டில் வருமானத்தை உற்பத்தி செய்யும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கினர். அன்று பொருளாதார மையங்களை ஏலமிட்டனர்.

அன்று மத்தள விமான நிலையத்தில் நெல்லை களஞ்சியப்படுத்தினர். நாங்கள் தீர்மானம் ஒன்றை எடுத்தால், அந்த தீர்மானம் மக்களுக்கு ஏற்றதாக இல்லை என்றால், அதனைத் திரும்பப் பெற அரசாங்கம் தயங்காது. ஜனாதிபதி தேவையான நேரத்தில், தேவையான தீர்மானங்களை எடுப்பார். வரவு – செலவுத் திட்டத்தில் அனைத்து துறைகளும் அடங்கும் வகையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார். ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறும் கூறுகிறார்.

நாம் பொதுத் தேர்தலை நடத்துவோம். நாங்கள் அதற்கு தயார். இரண்டு வருடங்களின் பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும். நாட்டில் இந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி விட்டு நாம் நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்வோம் எனவும் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.



# யாழ்ப்பாணம் – மல்லாகம் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் – மல்லாகம் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குப்பட்ட மல்லாகம் சந்தியில் பட்டா ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பன்னாலையைச் சேர்ந்த 37 வயதுடைய இரத்தினசிங்கம் ராசகாந்தன் என்பவரே காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# யாழ். பல்கலையில் நாளை ஆய்வுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இருந்து வெளியாகும் தென்னாசியக் கற்கைகளுக்கான இலங்கை ஆய்வேட்டின் (The Sri Lanka Journal of South Asian Studies) பத்திராதிபர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் புகையிலை அரசி: 1784 - 1844 வரையிலான காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஓர் அடிமை முறைச் சமூகம் இருந்தமைக்கான நிலைப்பாடு (Tobacco Rani: The Case for a Jaffna Slave Society, 1784 -1844) என்ற தலைப்பிலான ஆய்வு உரை ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கிலே இடம்பெறவுள்ளது.

இந்த ஆய்வுரையினை கனடாவின் ரொறொன்டோ பல்கலைக்கழகத்திலே பின் கலாநிதி நிலைப் படிப்புக்களை மேற்கொண்டிருக்கும் கலாநிதி மார்க் ஈ. பாம்போர்த் (Dr. Mark E. Balmforth) நிகழ்த்துவார்.

இந்த ஆய்வுரையினை அடுத்து ஆய்வுரையினை ஒட்டிய ஒரு கலந்துரையாடலும் இடம்பெறும். இந்த நிகழ்விலே அனைவரும் கலந்துகொள்ளலாம்.

# பலஸ்தீன ஹமாஸ் இராணுவப் பிரிவுக்கு முழுமையாகத் தடைவிதித்தது பிரித்தானியா



பலஸ்தீனத்தில் இயங்கி வரும் ஹமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவுக்கு முழுமையாகத் தடை விதிக்க முடிவு செய்துள்ளதாக, உள்துறை அமைச்சர் பிரீத்தி படேல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய அதிநவீன ஆயுதங்கள், பயங்கரவாதப் பயிற்சி மையங்கள் உள்ளிட்டவை ஹமாஸ் அமைப்பிடம் உள்ளன.

அந்த அமைப்பின் அரசியல் பிரிவுக்கும் இராணுவப் பிரிவுக்கும் இடையே பிரித்தானியா அரசாங்கம் இனியும் வேறுபாடு காட்டாது.

எனவே, ஹமாஸ் அமைப்பு முழுவதையும் தடை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைக்கு நாடாளுமன்ற ஒப்புதல் கிடைத்தால், இனி ஹமாஸ் அமைப்பில் யாராவது இணைந்தாலோ, அந்த அமைப்புக்கு ஆதரவாகப் பேசினாலோ அவர்களுக்கு 14 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

முன்னதாக, பலஸ்தீனத்தில் இயங்கி வரும் ஹமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவுக்கு பிரித்தானியா, ஏற்கெனவே 2001ஆம் ஆண்டு தடை விதித்தது. எனினும், அந்த அமைப்பின் அரசியல் பிரிவுக்கு இன்னும் தடை விதிக்கப்படாமல் உள்ளது.

# சூடானில் அப்தல்லா ஹாம்டோகிடம் ஆட்சியை ஒப்படைக்க இராணுவம் சம்மதம்



சூடானில் பிரதமர் அப்தல்லா ஹாம்டோகிடம் ஆட்சியை மீண்டும் ஒப்படைக்க, இராணுவம் சம்மதம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. அமைப்பும் அமெரிக்காவும் முக்கிய பங்கு வகித்த ராணுவத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் இடையேயான பேச்சுக்கு பிறகு இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரையும் விடுவிக்கவும் இராணுவம் சம்மதித்தது.

மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, சுதந்திரமான ஓர் அமைச்சரவைக்கு ஹாம்டோக் தலைமை வகிப்பார்.

ஆட்சியில் தனது பிடியை இறுக்கும் வகையில் புதிய இறையாண்மை சபையை இராணுவம் அமைத்துள்ளது.

ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக வெளியிடுவதற்கு முன் அந்த சபையில் இதுகுறித்து கூடி விவாதிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். சூடானை கடந்த 198ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு வந்த ஒமர் அல்-பஷீர், இராணுவத்தால் கடந்த 2019ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். அதன்பிறகு இராணுவம் மற்றும் அரசியல் தலைவர்களைப் பிரதிநிதிகளாக கொண்ட இறையாண்மை சபையில் உருவாக்கப்பட்டு, இடைக்கால அரசாங்கமும் அமைக்கப்பட்டது. அந்த அரசாங்கத்தின் பிரதமராக அப்தல்லா ஹாம்டோக் பொறுப்பேற்றார்.

இந்த நிலையில், அந்த அரசாங்கத்தை இராணுவம் கடந்த மாதம் 25ஆம் திகதி கலைத்தது. மேலும், நாட்டில் அவசரநிலையும் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் தீவிர போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. போராட்டங்களை ஒடுக்குவதற்காக பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 40 பேர் உயிரிழந்தனர் என சூடான் மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# குழந்தைகள் தின கொண்டாட்டத்தை புறக்கணித்த ஆப்கானிஸ்தான் யுனிசெவ்

ஆப்கானிஸ்தானில் பசி, பட்டினி, நோயால் வாடும் குழந்தைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சர்வதேச குழந்தைகள் தினமான நவம்பர் 20 திகதியை ஆப்கான் யுனிசெவ் அமைப்பானது கொண்டாட்டங்களைப் புறக்கணித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆப்கானிஸ்தானில் பெருகிவரும் மனித உரிமை சர்ச்சையால் அந்நாட்டுக் குழந்தைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச குழந்தைகள் தினமான நவம்பர் 20 ஆப்கான் குழந்தைகளின் துயரத்தை உணர்ந்து அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கொண்டாட்டங்கள் புறக்கணிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்து ஆப்கானிஸ்தானுக்கான யுனிசெவ் பிரதிநிதி ஆலிஸ் அகுங்கா கூறுகையில், இந்த ஆண்டு சர்வதேச குழந்தைகள் தினத்தை கொண்டாடவில்லை. ஆப்கானிஸ்தானில் ஒவ்வொரு குழந்தையும் சந்தித்து வரும் இன்னலைக் கருத்தில் கொள்ளும்போது, குழந்தைகள் தினத்தைக் கொண்டாடவே முடியாது.

மேலும், ஆப்கான் யுனிசெப் இணையதள சேவைகளைக் கிளிக் செய்தால் வெறும் கறுப்பு நிறம் மட்டுமே தென்படும். இதன் மூலம் ஆப்கான் குழந்தைகளுக்கு உதவி செய்யுமாறு உலக நாடுகளுக்கு ஒரு செய்தியைக் கடத்த முயற்சிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.



# அரச ஊழியர் சம்பள பாக்கியை வழங்க ஒப்புக்கொண்ட தலிபான்கள்

ஆப்கானிஸ்தானில் அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு சம்பள பாக்கி வழங்கப்படும் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர் என 'ராய்ட்டர்ஸ்' செய்தி முகமை தெரிவிக்கிறது.

சென்ற ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ஆப்கானிஸ்தான் அரசில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் அரசு ஊழியர்களுக்கு மூன்று மாத மாக வழங்கப்படாமல் இருக்கும் சம்பளம் , வழங்கப்படும் என ஆப்கானிஸ்தான் நிதியமைச்சகம் கூறியுள்ளது என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் சபிகுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியவாத அமைப்பான தலிபான் ஆட்சிக்கு வந்தபின்பு, ஆப்கானிஸ்தான் பொருளாதாரம் மிகவும் மோசமாக இருக்கும் நிலையில் சம்பள பாக்கியை வழங்குவதற்கான பணம் எங்கிருந்து வரும் என்று அவர் தெரிவிக்கவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# இஸ்லாமியர்களை விடுதலை செய்யாமல் இருப்பதா?

## பொதுமன்னிப்பு குறித்து சீமான் ஆவேச அறிக்கை

20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை மதத்தினைக் காரணமாகக் காட்டி விடுதலை செய்ய மறுப்பதா?, என்று கேள்வியெழுப்பியுள்ளார் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

20ஆண்டுகளுக்கும்மேலாகக்கொடுஞ்சிறைவாசம் அனுபவித்து வரும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்ய முடியாது எனக் கூறி தி.மு.க. அரசு அரசாணை வெளியிட்டி ருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. தமிழகச் சிறைகளில், இஸ்லாமியர்களை எவ்வித விசாரணையுமின்றி, சந்தேகத்தின் அடிப்படையில் மட்டுமே நீண்ட நெடுங்காலமாக அடைத்து வைத்திருப்பது பெருந்துயரென்றால் மறுபுறம், சட்டத்தின்படி இருக்கும் தார்மீக வாய்ப்புகளை முற்றாக மறுத்து, 20, 25 ஆண்டுகளென தனது வாழ்நாளின் பெரும்பகுதியை சிறையிலேயே கழித்து வரும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்ய விடாப்பிடியாய் மறுத்து வதைத்து வருவது வரலாற்றுப் பெருங்கொடுமையாகும்.

முன்னாள் முதல்வர் ஐயா கருணாநிதி அவர்களது ஆட்சிக்காலத்தில், கடந்த 2008 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பத்தாண்டுகளுக்கும்மேலாகத்தண்டனை அனுபவித்து வரும் சிறைவாசிகளை விடுதலை செய்யலாம் எனும் அரசாணை வெளியிடப்பட்டது. அதனடிப்படையில், மதுரை மாமன்ற உறுப்பினர் அம்மா லீலாவதியை வெட்டிக்கொன்ற கொடுங்கோலர்களைக் கூட விடுதலை செய்த அன்றைய தி.மு.க. அரசு, இச்சட்டம் நீண்டகாலமாகச் சிறையில் வாடும் இஸ்லாமியர்களுக்குப் பொருந்தாது என்று அறிவித்தமை ஈவிரக்கமற்ற கொடுஞ்செயலாகும். இந்நிலையில், தற்போதைய ஆட்சியில் கடந்த செப்டெம்பர் 13 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் உரை யாற்றிய முதல்வர் ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி 700 ஆயுள் தண்டனைசிறைவாசிகள்விடுதலைசெய்யப்படுவார்கள் என்று வெளியிட்ட அறிவிப்பிலும், இஸ்லாமிய சிறைவாசிகள் இடம்பெறாதமை பெரும் ஏமாற்றமளிக்கிறது.

இஸ்லாமியர் என்பதால் விடுதலை செய்ய முடியாது என்கிற தி.மு.கவின் மதப்பாகுபாட்டு நிலைப்பாட்டிற்கும் பா.ஜ.கவுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? பா.ஜ.கவை அடியொற்றி செல்கிறதா தி.மு.க. அரசு? 'சிறுபான்மையினர்' என்று பெரும்பான்மைத் தமிழினத்தின் அங்கத்தினராக விளங்கும் இஸ்லாமியர்களை விளித்து, அவர்களது காவலரெனத் தங்களுக்குத் தாங்களே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தி.மு.க. அரசு, அம்மக்களைக் காக்கும் செயல் இது தானா? வெட்கக்கேடு! என சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



## டெல்லியில் குறையும் வளிமண்டல மாசு தொடர்ந்து காற்று வீசுவதால் முன்னேற்றம்

தலைநகர் டெல்லியின் வளிமண்டல மாசுபாடு கடந்த சில வாரங்களாக மிகத் தீவிரமான சூழலில் இருந்து வந்த நிலையில், அங்கு தொடர்ந்து காற்று வீசி வருவதால் தானாகவே காற்றின் மாசு சற்று குறைந்து வருவதாக தரவுகள் தெரிவித்துள்ளன.

டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மணிக்கு 20 கிலோ மீற்றர் வேகத்தில் மெல்லிய காற்று வீசி வருகிறது. இதனால் காற்றிலுள்ள தூசு மெல்ல அடித்துச் செல்லப்படுவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து காற்றின் தரம் தற்பொழுது 307 ஆக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருதினங்களுக்கு முன்னர் இந்த அளவு 349 என இருந்தது. இன்னும் தொடர்ந்து காற்று வீசுவது நீடித்தால் காற்றின் தரம் மேலும் உயரும் என அதிகாரிகள் தகவல் தெரிவிக்கின்றனர். இதற்கிடையில் டெல்லி மாநில சுகாதாரத்துறை அமைச்சர் காற்றின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக அவசர ஆலோசனையில் ஈடுபட்டனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் வளிமண்டல மாசுபாட்டால் பொதுமக்களுக்கு ஏற்படும் ஆரோக்கிய பாதிப்புகளை குறைக்கும் முயற்சியாக, முதலமைச்சர் அரவிந்த்கெஜ்ரிவால்தலைமையிலான டெல்லி அரசு புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி, அத்தியாவசியமற்ற பொருள்களை ஏற்றிக்கொண்டு வரும் பாரவூர்திகள் டெல்லி நகருக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதி நவம்பர் 26 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த உத்தரவில் டெல்லியில் கட்டுமானம் மற்றும் இடிப்பு நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து டெல்லி அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அலுவலகங்கள் தவிர பிற அரசு அலுவலகங்கள் நவம்பர் 26 வரை மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, நவம்பர் 26 வரை தனியார் அலுவலகங்கள் தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

## பெற்றோல், டீசல் மாநில வரியைக் குறைக்கக்கோரி தமிழக பா.ஜ.கவினால் தொடர் போராட்டம் அறிவிப்பு

பெற்றோல் மற்றும் டீசல் மீதான மாநில வரியைக் குறைக்க தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக டிசெம்பர் 3 ஆம் திகதி வரை தொடர் போராட்டம் நடத்தப்படும் என பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை அறிவித் துள்ளார்.

இது தொடர்பாக அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசு பெற்றோல், டீசல் விலையை குறைக்கக் கோரியும், சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி சிலிண்டருக்கு 100 ரூபா குறைக்க வலியுறுத்தியும் டிசெம்பர் 3 ஆம் திகதிவரை மாநிலம் முழுவதும் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும், என்று அறிவித்துள்ளார்.



எந்தெந்த அணியின் சார்பில், எந்த வகைப் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும், போராட்டத்தின் பொறுப்பாளர்கள் அடங்கிய பட்டியலின் விவரங்களையும் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ளார்.

## பாலியல் குற்றங்களுக்கு கடுமையான நடவடிக்கை தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியசாமி உறுதி

பாலியல் குற்றச்சாட்டுகளில் யார் ஈடுபட்டாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்ட வனத்துறை அலுவலகத்தில் வனத்துறை மற்றும் வேளாண்துறை இணைந்து இலவசமாக விவசாயிகளுக்கு மரக்கன்று வழங்கும் விழாவில் சிறப்பு அழைப்பாளராக கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி மற்றும் உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி ஆகியோர் கலந்துகொண்டு இலவச மரக்கன்று வழங்கும் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம், திண்டுக்கல் அருகே உள்ள முத்தனம்பட்டியில் உள்ள தனியார் கல்லூரியின் தாளாளர் மாணவிகளிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டனர் என மாணவிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், கல்லூரியின் தாளாளர் தலைமறைவான செய்திபற்றி கேள்வியெழுப்பப்பட்டது.

அந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், கல்லூரியில் படித்து வந்த மாணவிகள் மீது தொடரும் பாலியல் தொல்லைகள் ஏற்றுக்கொள்ள முடியாத கடுங் குற்றங்களாகும். யார் இத்தகை செயல்களைச் செய்தாலும் அவர்கள் மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். பாலியல் குற்றத்தை யார் செய்திருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண்யம் பார்க்கப்பட மாட்டாது. கல்லூரியில் படித்து வந்த மாணவிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் இதற்காகக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாணவிகள் என்ன கோரிக்கை வைக்கிறார்களோ, அந்தக் கோரிக்கையை கண்டிப்பாக தமிழக அரசு ஏற்று உரிய முறையில் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவிகளுக்கு பாலியல் ரீதியாகவோ அல்லது உடல், உள ரீதியிலோ தொந்தரவு செய்தால் அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு தமிழக முதல்வர் அறிவுறுத்தியுள்ளார் என தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31 காயங்கள்

## நேற்று நீதிமன்ற விசாரணையில் தெரிய வந்தது





மட்டக்களப்பில் பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31காயங்கள் இருந்தன என நேற்றைய நீதிமன்ற விசாரணையில் தெரிய வந்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் 3ஆம் திகதி இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் போதைப்பொருள் வைத்திருந்தார் என தெரிவித்து இளைஞர் ஒருவர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த இளைஞன் பொலிஸ் காவலில் உள்ள போது உயிரிழந்திருந்தார்.

குறித்த இளைஞன் ஐஸ் போதைப் பொருள் பக்கட்டை விழுங்கியதால் அது வயிற்றினுள் வெடித்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை குறித்த இளைஞனின் குடும்பத்தினர் மறுத்திருந்தமையுடன் குறித்த இளைஞனை பொலிஸார் தாக்கியதாலேயே உயிரிழந்திருந்தனர் எனத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தநிலையில்குறித்த இளைஞனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் விதுசனின் உடலில் 31வகையான காயங்கள் அறியக் கிடைத்துள்ளதாகவும்உயிரிழந்த இளைஞர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

பொலிஸார் தெரிவித்த விடயங்களுக்கு மாறான சம்பவம் குறித்த இளைஞனுக்கு பொலிஸ் காவலில் நடைபெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலிஸார் ஏற்கனவே குறித்த இளைஞன் தற்கொலை செய்தார் என நீதிமன்றில் பொய்யான தகவலை வழங்கியிருந்தார்கள்.

அது பொய்யென்றும் குடும்பத்தினர் முன்பாக பொலிஸார் குறித்த இளைஞன் தாக்கப்பட்டிருந்தார் என்றும் நாங்கள் ஏற்கனவே நீதிமன்றுக்கு தெரிவித்திருந்தோம். அது இப்போது உண்மையாகியிருக்கின்றது. நீதிமன்றம் இந்த வழக்கில்மிகவும்கரிசனையுடன்உள்ளதை நாங்கள் அவதானித்தோம். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். பேராதனை பல்கலைக்கழகபேராசிரியரின்இரண்டாவது உடற்கூற்று பரிசோதனை விரைவாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

உரிய அறிக்கையினை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸாருக்கு நீதிமன்றம் இறுக்கமான உத்தரவினை பிறப்பித்திருக்கின்றது. சரியான நீதி கிடைக்கும் வரையில் நாங்கள் போராடுவோம் என தெரிவித்தார்.

இதேநேரம் குறித்த வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் மரண விசாரணைக்கான உதவிகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்து வருவதுடன்,தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் நீதிமன்றுக்கு வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 37 மாணவர்களுக்குக் கொரோனா!

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 37 மாணவர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் அனைவரும் அட்டாளைச்சேனை கொவிட் இடை நிலை முகாமில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

கொவிட் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கடந்த 3 தினங்களாக கல்முனை பிராந்தியத்தில்மேற்கொள்ளப்பட்ட கொவிட் பரிசோதனையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 37 மாணவர்கள் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தற்போது கட்டுப்பாட்டு நிலைமை தளர்த்தப்பட்ட நிலையிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் பல இடங்களில் கொவிட் தொற்று அதிகரித்த நிலைமையை காட்டியுள்ளது.

10 தொடக்கம் 20 வீதம் வரையான கொவிட் தொற்று அதிகரித்து காணப்படுகின்றது. இதனடிப்படையில் எமது கல்முனை பிராந்தியத்தில் 3 தினங்களாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 37 மாணவர்கள் கொவிட் தொற்று நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளான பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அட்டாளைச்சேனை கொவிட் இடைத் தங்கல் முகாமில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் கொவிட் பரிசோதனையின் போது பொத்துவில் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த 11 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும் பல இடங்களிலும் தொற்று அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

கல்முனை பிராந்தியத்திலும் தடிமன், காய்ச்சல் பரவலாகக் காணப்படுகின்றன என தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. ஆகவே, எமது பரிசோதனை நடவடிக்கையிலும் கட்டுப்பாட்டு செயற்பாட்டிலும் சற்று இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

பொதுமக்கள் இந்த நிலைமைகளை உணர்ந்தவர்களாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதும் சுகாதாரப் பழக்கவழக்கங்களை மிக இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள். பல இடங்களில் சுகாதார நடைமுறைகளை மீறி பொதுமக்கள் ஒன்றுகூடுகின்றமை தொடர்பாக முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

# சுமணரட்ண தேரரை இடமாற்றினால்தான் தமிழ்– சிங்கள உறவு மேலோங்கும்

## இரா.துரைரெத்தினம் தெரிவிப்பு




மட்டக்களப்பு அம்பிட்டிய சுமணரட்ண தேரரை இடமாற்றினால்தான் தமிழ் மற்றும் சிங்கள உறவு மேலோங்கப்படும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.பத்மநாபா மன்ற தலைவருமான இரா.துரைரெத்தினம் தெரிவித்துள்ளார்.

மேலும் அம்பிட்டிய சுமணரட்ண தேரர், பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் காணிப் பிரச்சினைக்காக கடந்த 15ஆம் திகதி சென்று, அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறைகேடாக நடந்து கொண்டதை வன்மையாக கண்டிக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, ஒருசில பௌத்த குருமாரும், சுமணரட்ண தேரரும் இம் மாவட்டத்தில் கடந்த 11.11.2013ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

அதாவது அண்மையில் (15.11.2021) பிரதேச செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்தியது வரையும் இம் மதகுருவின் கெடுபிடிகள், தவறான நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

இலங்கை அரசும் பௌத்த சாசன அமைச்சும் இலங்கை நிருவாக சேவையும் உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சும் மதகுருவின் வன்முறைத்தனத்தை நிறுத்துவது தொடர்பாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

பௌத்த மதகுரு என்பதற்காகவா? இதே தவறை ஏனைய மதகுருக்கள் செய்திருந்தால் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கும்.

# தம்பலகாமம் சிராஜ் நகர்வாசி விபத்தில் சிக்கி உயிரிழந்தார்



கதரஸ்கொடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கண்டி-திருகோணமலை பிரதான வீதியில் ஞாயிறு காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தம்பலகாமம் சிராஜ் நகரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 56 வயதான நபராவார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தம்பலகாமம் நோக்கி சென்றுகொண்டிருந்த கனரக வாகனத்துடன் வான் மோதியதில் வானில் பயணித்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காயமடைந்த நால்வர் தம்புள்ள பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கதரஸ்கொடுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கையணி முன்னிலையில்!



மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி பெற்ற 386 ஓட்டங்களுக்குப் பதிலளித்து விளையாடிவரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி இன்றைய ஆட்ட நேர முடிவின்போது 9 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இலங்கையணியின் முதல் இன்னிங்ஸில் பெறப்பட்ட 386 ஓட்டங்களில் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 147 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 61, பதும் நிசங்க 56, டினேஸ் சந்திமால் 45 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்தியத் தீவுகளின் ரொஸ்டன் சேஸ் 5 விக்கெட்டுக்களையும், ஜொமெல் வரிகன் 3, கப்ரியெல் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணியில் கைல் மேயர்ஸ் 45, பிரத்வெய்ட் 41, கோர்ன்வால் 39 ஓட்டங்களை எடுத்தனர். தற்போது 9 விக்கெட்டுக்களை இழந்து துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள், முதல் இன்னிங்ஸில் இலங்கையணியைவிட 162 ஓட்டங்கள் பின்னிலையிலுள்ளது.

இலங்கையின் பந்துவீச்சில், ரமேஸ் மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம இருவரும் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர். மழை காரணமாக இன்றையநாள் ஆட்டம் முன்கூட்டியே நிறைவுக்குக்கொண்டுவரப்பட்ட நிலையில், போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நாளை தொடரவுள்ளது.

## பாகிஸ்தானில் திட்டமிட்டபடி சம்பியன்ஸ் கிண்ணத்தொடர் நடக்குமென ஐ.சி.சி. தலைவர் கிரேக் பார்க்ளே நம்பிக்கை



2024 முதல் 2031 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் நடைபெறவுள்ள சர்வதேச நாடுகள் பங்குபெறும் உலகக் கிண்ணங்களுக்கான கிரிக்கெட் தொடர் அட்டவணையை அண்மையில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) வெளியிட்டது. 2025 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை நடத்தும் வாய்ப்பு பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 29 ஆண்டுகளுக்குப் பிறகு ஐ.சி.சியின் பெரிய தொடரொன்றை பாகிஸ்தான் நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. இறுதியாக 1996 ஆம் ஆண்டு ஒருநாள் போட்டி உலகக் கிண்ணத் தொடரை இந்தியா, இலங்கையுடன் இணைந்து பாகிஸ்தான் நடத்தியிருந்தது.

பாகிஸ்தானுக்குச் சென்று கிரிக்கெட் விளையாடுவதை பல நாடுகள் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தவிர்த்துவரும் நிலையில், இது குறித்து பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த ஐ.சி.சி. தலைவர் கிரேக் பார்க்ளே, 2025 ஆம் ஆண்டுக்கான சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரை பாகிஸ்தானில் நடத்துவதில் உறுதியாக இருக்கிறோம். பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் தொடரில் அனைத்து நாடுகளும் பங்கேற்கும். பல ஆண்டுகள் கழித்து பாகிஸ்தானில் மிகப் பெரிய கிரிக்கெட் தொடர் நடைபெறவிருக்கிறது. எந்தப் பிரச்சினையும் இல்லாமல் போட்டிகள் நடைபெறும் என நம்புகிறோம், என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானால் போட்டியை நடத்த முடியுமா, என்பதைப் பற்றி நாங்கள் யோசிக்கவில்லை. அவர்களால் நிச்சயமாக நடத்த முடியும் என்று நம்பினோம். அவர்களுக்கு இதுவொரு நல்ல வாய்ப்பு. பாகிஸ்தானுக்கு அனைத்து நாடுகளும் துணை நிற்கும் என நம்புகிறோம். முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு திட்டமிட்டப்படி தொடர் நடக்கும், என்றும் கிரேக் பார்க்ளே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.




## ஏ.டி.பி. பைனல்ஸ் டென்னிஸ் தொடர் ஜேர்மனியின் ஸ்வெரேவ் வெற்றி

இத்தாலியில் நடைபெற்ற உலக ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் மெட்வடேவை வீழ்த்தி ஸ்வெரேவ் வெற்றிபெற்றார்.

ஏ.டி.பி. பைனல்ஸ் எனப்படும் உலக ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி இத்தாலியின் துரின் நகரில் நடைபெற்றுவந்தது. இதன் இறுதிப்போட்டியில் நடப்புச் சம்பியனும் உலகின் இரண்டாம் நிலை வீரருமான ரஷ்யாவைச் சேர்ந்த டேனில் மெட்வடேவும் ஒலிம்பிக் சம்பியனும், தரவரிசையில் மூன்றாம் நிலை வீரருமான ஜேர்மனியைச்சேர்ந்த அலெக்சாண்டர் ஸ்வெரேவும் மோதினர்.

இந்த ஆட்டத்தில், ஸ்வெரேவ், 6-4, 6-4 என்ற நேர் செட்களில் மெட்வடேவை வீழ்த்தி வெற்றிபெற்றார். இது ஏ.டி.பி. பைனல்ஸ் தொடரில் ஸ்வெரேவ் பெறும் இரண்டாவது சம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

## கட்டார் கிராண்ட் பிரிக்ஸ் லூயிஸ் ஹமில்டன் முதலிடம்



போர்முலா-1 கார்பந்தயத்தின் கட்டார் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் முதலிடம் பிடித்துள்ளார்.

நடப்பு ஆண்டின் 20 ஆவது சுற்றான கட்டார் கிராண்ட் பிரிக்ஸ் லோசைல் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது. 306.66 கிலோ மீற்றர் பந்தயத் தூரம் கொண்ட இந்தப் போட்டியில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் பங்குபற்றினர்.

இதில் மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன், பந்தயத் தூரத்தை 1மணித்தியாலம் 24நிமிடங்கள் 28.471 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டன. அவரை விட 25.743 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தயத் தூரத்தைக் கடந்த, ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் இரண்டாவது இடத்தையும் 19 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார். 59.457 வினாடிகள் பின்தங்கிய அல்பைன் அணியின் வீரரான பெர்னாண்டோ அலொன்சோ மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அவருக்கு 15 புள்ளிகள் கிடைத்தன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 20 சுற்றுகளின் முடிவில், ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் ஒன்பது வெற்றிகளுடனும் 351.5 புள்ளிகளுடனும் முதலாவது இடத்தில் உள்ளார்.

மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் ஏழு வெற்றிகள், 343.5 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்டெரி போட்டஸ், ஒரு வெற்றி, 203 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

தொடரின் இருபத்தோராவது சுற்றான சவுதி அரேபியன் கிராண்ட் பிரிக்ஸ், டிசெம்பர் 5 ஆம் திகதி ஜெட்டா கார்னிச் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

# வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகளில் மீனவர் கண்டு கொள்ளப்படவில்லை

## மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சமாசம் தெரிவிப்பு



வரவு – செலவுத் திட்டத்தில் மீனவர்கள் கண்டு கொள்ளப்படவில்லை எனவும், அண்மைக்காலமாக பாதிக்கப்பட்டு வரும் மீனவர்களுக்கு இதுவரை ஒரு சதம் கூட வழங்கப்படவில்லை எனவும், மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அண்மையில் ஏற்பட்ட சூறாவளி, இயற்கை அனர்த்தம் மற்றும் இந்திய மீனவர்களால் அண்மைக்காலமாக எமது மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களுக்கு இதுவரை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு சதம் ரூபா கூட இழப்பீடாக வழங்கப்படவில்லை எனவும் வரவு – செலவுத் திட்டத்தில் மீனவர்கள் கண்டு கொள்ளப்படவில்லை எனவும் மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம். ஆலம் கவலை தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதார சிக்கல்கள் தொடர்பாகப் பல தடவைகள் வெளிக்கொண்டு வந்திருந்தோம். ஆனால் யாரும் குறித்த விடயங்களைக் கண்டு கொள்ளவில்லை. தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் தொழில் இழப்புகளுக்கு எந்தவித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

அண்மையில் ஏற்பட்ட சூறாவளியாக இருக்கட்டும், இயற்கை அனர்த்தமாக இருக்கட்டும் இந்திய மீனவர்களால் அண்மைக்காலமாக எமது மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் பல லட்சம் ரூபா பெறமதியான மீன்பிடி உபகரணங்கள் சோதமாக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களுக்கு இது வரை ஒரு சதம் ரூபாகூட இழப்பீடாக மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை. இவர்கள் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் அரசாங்கத்தாலும், ஏனைய தரப்பினராலும் நடத்தப்படுகின்றனர். பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் தொடர்ந்து கடல் தொழிலை மேற்கொண்டு தமது குடும்பத்தைக் கொண்டு செல்வதற்கு கூட யாரும் உதவிகளை மேற்கொள்ள முன்வரவில்லை. தற்போது பொருளகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரிசி உட்பட அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. ஆனால் பிடிக்கப்படுகின்ற மீன்களின் விலை அதே விலையில் தான் இருக்கிறது. எனவே மீனவர்களின் உற்பத்திக்கான உரிய விலை கிடைக்க வேண்டும்.

வாழ்வாதாரத்துடன் சமனாகப் போட்டி போட்டு வாழக்கூடிய வகையில் அவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவித்திட்டங்கள் எதனையும் அரசு செய்ய வேண்டும் அல்லது தொண்டு அமைப்புக்களாவது முன் வந்து பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர்களுக்காகச் செயற்பட வேண்டும். எனவே, அரசு ஏதோ ஒரு வகையில் நிதி மூலங்களைப் பெற்று மீனவர்களுக்கான தனியான ஒரு செயற்பாட்டை முன்னெடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மீனவர்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம் என அவர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

---

### மாவீரர் நாள் தடை உத்தரவு

## கட்டளையை மீளப்பெறுமாறு வவுனியாவில் மனுத் தாக்கல்

மாவீரர் நாள் தடை உத்தரவுக் கட்டளையை மீளப் பெறுமாறு கோரி வவுனியா நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்த நிலையில், மன்றால் நாளை (புதன்கிழமை) வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இறந்தவர்களை நினைவு கூர எனக்கு வழங்கப்பட்ட தடை உத்தரவு கட்டளையை மன்று மீளப்பெற வேண்டும் என கோரி சட்டத்தரணி யூஜின் ஆனந்தராஜ் தலைமையில் வவுனியா நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தேன்.

வவுனியா மன்றில் இருந்த பல சட்டத்தரணிகளும் தாமாக முன்வந்து குறித்த வழக்கில் ஆஜராகியிருந்தார்கள். தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் 106 இன் (1), (3), (6)பிரிவின் படி ஆர்ப்பாட்டத்தையும், மாவீரர் தினத்தையும் நடத்துவதை நிறுத்துவதற்கான கட்டளை என வழங்கப்பட்டிருந்தது.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் அறிக்கையியலுக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்றும், இலங்கை சோசலிச குடியரசால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் தடை செய்யப்பட்டது. அந்த அமைப்புக்கு உடந்தையளித்தல், அதனை பிரபல்யப்படுத்துதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

அந்த இயக்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் நினைவாக 21.11 – 27.11 வரை உறுப்பினர்களை இணைத்து மாவீரர் நாள் செய்யவுள்ளதாகவும், இது விரோதமான செயற்பாடு எனவும் சுட்டிக்காட்டி பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மன்றிடம் இருந்து பொலிஸாரினால் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

இந்த கட்டளையின் படி நான் குறித்த விடயத்தை கவனத்தில் கொண்டு எமது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் இணைந்து இறந்த உறவுகளுக்கு நினைவு செலுத்த உரிமை இருக்கிறது. அது அடிப்படையான உரிமை என எனது சார்பில் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

தமிழ் மொழியை கையாண்டு இந்த வழக்கை நடத்த தற்போது ஆளணி இல்லை எனவும் மாவீரர் தினத்துக்கு பின் இந்த வழக்கை நடத்த பொலிஸார் அனுமதி கோரினர். எமது சட்டத்தர ணிகள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். மாவீரர் தினம் முடிந்த பின் தமது கட்சிக்காரருக்கு அவர் கோரும் நிவாரணம் கிடைக்காமல் போய்விடும்.

எனவே, கட்டளை வழங்குமாறு மன்றிடம் கோரினர். குறித்த நிகழ்வு தொடர்பில் கிடைத்த ஆதாரங்களை பொலிஸார் சாட்சிப்படுத்துவதற்காக நாளை (புதன்கிழமை) வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் மன்று கட்டளை வழங்கும் என எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரிக்கை

## தலவாக்கலையில் போராட்டம்



ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு வலியுறுத்தி நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட தலவாக்கலை, வட்டகொட சிங்கள மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று (திங்கட்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் பாடசாலைக்கு முன்பாக நடைபெற்றது.

தமது பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு நுவரெலியா கல்விப் பணிமனைக்கு அறிவித்தும் அதற்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பாடசாலையில் தமிழ் மற்றும் சிங்களம் பேசும் மாணவர்கள் கல்வி கற்கின்றதோடு, தரம் 6 முதல் 11 வரையுள்ள வகுப்புகளுக்குக் கற்பிக்க ஒரேயொரு ஆங்கில பாட ஆசிரியர் மாத்திரமே உள்ளார் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் கணிதம் உள்ளிட்ட பிரதான பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை எனவும் இதனால் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடை விலகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமை தொடருமானால் பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடையும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களைப் பெற்றுத் தருகிறோம் என அதிகாரிகள் எழுத்து மூலம் உறுதியளிக்கும் வரை போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# வவுனியா மேலதிக அரச அதிபருக்கு கொரோனா

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அவர் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுத்த துரித அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவருடன் தொடர்புடையவர்களையும் தனிமைப்படுத்தச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், மீண்டும் கொவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2021இல் வெளியிடப்பெற்றது.